**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**ஸ்ரீரங்கம்,**

**முன்னிலை : திரு.K.விஜய் ராஜேஷ், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

**2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 12-ஆம் நாள், வெள்ளிக்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 58/2022**

**CNR.NO.TNTP190044792022**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம், உதவி ஆய்வாளர் அவர்கள், குற்ற எண். 933/2022 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரி:<br>1. திரு. ராஜேஸ்குமார் (வயது 22)<br>த/பெ. ராஜசேகர் |
| குற்றப்பிரிவு | இ.த.ச. பிரிவு 294(b), 341, 387, 506(2) |
| வனையப்பட்டது | இ.த.ச. பிரிவு 294(b), 341, 387, 506(2) |
| தண்டிக்கப்பட்டது | **எதிரி ஆஜர். திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.**<br>**இறுதியாக, அரசு தரப்பில் எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 341, 387, 506(2) -ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை குற்றவாளி இல்லையென முடிவு செய்து கு/வி/மு/ச 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.** |
| தீர்மானம் | எதிரி குற்றவாளி இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர் விபரம்

| வ. | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண் | | | | | | |
| 1 | திரு. ராஜேஸ்குமார் | திரு. ராஜசேகர் | இந்து | கூலி | நெ.71/A, சேவியார் புரம், ரயில்வே ஸ்டேசன் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி | 22 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 31.07.2022 |
| புகார் | : | 02.08.2022 |
| கைது தேதி | : | 02.08.2022 |
| பிணை விடுவிப்பு | : | 27.07.2023 |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 17.05.2024 |
| விசாரணை முடிவு | : | 12.06.2026 |
| எதிரி காவலில் இருந்த நாட்கள் | : | N.A |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 05.09.2022 |
| Date of Questioning | : | 14.03.2024 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | N.A |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief — Cross<br>(1) 16.04.2026 — 16.04.2026<br>(2) 16.04.2026 — 16.04.2026<br>(3) 07.05.2026 — 07.05.2026 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 11.05.2026 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை | : | Nil |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | | |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 05.09.2022 ம் தேதியன்று CC. No.58/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 12.06.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. வசந்தன் அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

## தீர்ப்புரை

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:–**

இவ்வழக்கில் புகார்தாரர் பிரகாஷ் ஏற்கனவே எதிரி ராஜேஸ்குமார் மீது கொடுத்த புகாரின் பேரில் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் வழக்கு உள்ளது. அதனால் புகார்தாரருக்கும் எதிரிக்கும் முன் விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 31.07.2022 ம் தேதி மாலை சுமார் 18.00 மணியளவில் திருச்சி மாநகரம் ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட சம்பவ இடமான இரயில்வே ஸ்டேசன் ரோடு ராஜா கரணைபட்டறை அருகில் புகார்தாரர் பிரகாஷ் அவரது மனைவியான சாட்சி புவனேஸ்வரி மற்றும் குழந்தைகளுடன்

சொந்த வேலையாக வெளியில் சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்தபோது அங்கிருந்த எதிரி ராஜேஸ்குமார் ஏற்கனவே உள்ள முன் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு புகார்தாரர் பிரகாஷையும் சாட்சி புவனேஸ்வரி மற்றும் குழந்தைகளை வீட்டிற்கு போக விடாமல் வழிமறித்து எதிரி ராஜேஸ்குமார் மறைத்து வைத்திருந்த பிச்சுவா கத்தியை எடுத்துக்காட்டி புகார்தாரரைப் பார்த்து தேவுடியா புண்டமவனே, கேஸ் புண்ட கொடுத்தியேடா, அந்த கேஸுக்கு உங்க அப்பனாடா செலவு புண்ட பண்ணுவான், தேவடியா பயலே என்று அசிங்கமாக திட்டியும், கேஸுக்கான செலவு பணத்தை கொடுடா, இல்லைனா உன்னையும், உன் குடும்பத்தையும் இங்கேயே வெட்டிகாலி செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 341, 387, 506(2) ன் கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு எதிரி முன்னிலையான உடன் அவருக்கு வழக்காவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்பு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இருதரப்பு கேட்கப்பட்டும் எதிரிக்கு எதிராக கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் படி எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 341, 387, 506(2) கீழ் அவரிடம் விளக்கி வினவியபோது எதிரி பொய்வழக்கு குற்றவாளி இல்லை என கூறியதால் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை**:–

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :–

(1) **அ.சா.1 திரு. பிரகாஷ்** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வந்து மாநகராட்சியில் துப்புறவு பணியாளராக வேலை செய்து வருவதாகவும், சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மாலை 06.00 மணியளவில் தானும் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் சொந்த வேலையாக வெளியில் சென்றுவிட்டு ராஜா கரணை பட்டறை அருகே வந்துகொண்டிருந்தபோது அங்கு வந்த அடையாளம் தெரியாத ஒரு நபர் தங்களை வழிமறித்து ஆபாசமான வார்த்தைகளால் திட்டி செலவுக்கு பணம் கொடு என்று கேட்டு தகராறு செய்து மறைத்து வைத்திருந்த பிச்சுவா கத்தியை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், அந்த நபர் யார் என்று தனக்கு தெரியாது என்றும், வழக்கின் எதிரி மீது இருந்த முன் விரோதம் காரணமாக ஸ்ரீரங்கம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான் கொடுத்தது தான் என்றும், அதில்ர உள்ள விவரங்கள் தனக்கு ஞாபகம் இல்லை என்றும், புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும், அ.சா.1 சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார் .

(2) அ.சா.2 **திருமதி. புவனேஸ்வரி** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கத்தில் வசித்து வீட்டுகுடித்தனம் நடத்தி வருவதாகவும், சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மாலை 06.00 மணியளவில் தானும் அ.சா.1 மற்றும் குழந்தையுடன் சொந்த வேலையாக வெளியில் சென்றுவிட்டு ராஜா கரணை பட்டறை அருகே வந்து கொண்டிருந்தபோது அங்கு வந்த அடையாளம் தெரியாத ஒரு நபர் தங்களை வழிமறித்து ஆபாசமான வார்த்தைகளால் திட்டி செலவுக்கு பணம் கொடு என்று கேட்டு தகராறு செய்து மறைத்து வைத்திருந்த பிச்சுவா கத்தியை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், அந்த நபர் யார் என்று தனக்கு தெரியாது என்றும், அ.சா.2 சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(3) அ.சா.3 **திரு. மதியழகன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு. சிவசுப்பிரமணியன் அவர்களின் கையெழுத்து தனக்கு நண்கு பரீட்சையம் வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், வழக்கின் காலதமதத்தை கருத்தில் கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 02.08.2022–ம் 08.30 மணிக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள் பணியில் இருந்தபோது ஸ்ரீரங்கம் ரயில்வே ஸ்டேசன் ரோட்டைச் சேர்ந்த முரளி மகன் பிரகாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 933/2022 சட்டப்பிரிவுகள் 341, 294(b),

387, 506 (2) இதசவின்கீழ முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அந்த புகார் மனு அ.சா.ஆ−2 என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.3 என்றும், பின்னர் அன்யை தினம் காலை 9 மணிக்கு சம்பவம் இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் கிஷோர்குமார், மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் ஆவணம்,. அ.சா.ஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அ.ச.ஆ.5 என்றும், பின்னர் அன்றைய தினம் காலை 09.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய வழக்கு சொத்தான சுமார் 40 செ.மீ நீளமுள்ள பிச்சுவா கத்தி ஒன்று கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜர் ஆவணம் அ.ச.ஆ.6 என்றும், பின்னர் மேற்படி வழக்கு சொத்தை படிவம் −91 ன்மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும், அந்த படிவம் −91 அ.ச.ஆ.7 என்றும், வழக்கு சொத்தான சுமார் 40 செ.மீ நீளமுள்ள பிச்சுவா கத்தி ஒன்று அ.சா..பொ.1 என்றும், பின்னர் வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் கடந்த 02.08.2022 ம் தேதி 12.00 மணிக்கு ஸ்ரீரங்கம் தேவி தியேட்டர் அருகில் எதிரி ராஜேஷ்குமார் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து உரிய சட்டநடைமுறைகளை பின்பற்றி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்னர் சாட்சிகள் பிரகாஷ், புவனேஷ்வரி, இளவரசன், பழனிசாமி, கிஷோர்குமார், மாரிமுத்து ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கில் உதவி ஆய்வாளர் திரு. சிவசுப்பிரமணியன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி

மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், அ.சா.3 சாட்சியம் அளித்துள்ளார்.

6. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க, எதிரி அதை மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரிகள் மீது இதச பிரிவு 294(b), 341, 387, 506(2) அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8. **தீர்வு** :–

I) இவ்வழக்கில் புகார்தாரர் பிரகாஷ் ஏற்கனவே எதிரி ராஜேஸ்குமார் மீது கொடுத்த புகாரின் பேரில் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்தில் வழக்கு உள்ளது. அதனால் புகார்தாரருக்கும் எதிரிக்கும் முன் விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 31.07.2022ம் தேதி மாலை சுமார் 18.00 மணியளவில் திருச்சி மாநகரம் ஸ்ரீரங்கம் காவல் நிலைய சரக எல்லைக்குட்ப்பட்ட சம்பவ இடமான இரயில்வே ஸ்டேசன் ரோடு ராஜா கரணைபட்டறை அருகில் புகார்தாரர் பிரகாஷ் அவரது மனைவியான சாட்சி புவனேஸ்வரி மற்றும் குழந்தைகளுடன் சொந்த வேலையாக வெளியில் சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்தபோது அங்கிருந்த எதிரி ராஜேஸ்குமார் ஏற்கனவே உள்ள முன் விரோதத்தை மனதில்

வைத்துக்கொண்டு புகார்தாரர் பிரகாஷையும் சாட்சி புவனேஸ்வரி மற்றும் குழந்தைகளை வீட்டிற்கு போக விடாமல் வழிமறித்து எதிரி ராஜேஸ்குமார் மறைத்து வைத்திருந்த பிச்சுவா கத்தியை எடுத்துக்காட்டி புகார்தாரரைப் பார்த்து தேவுடியா புண்டமவனே, கேஸ் புண்ட கொடுத்தியேடா, அந்த கேஸுக்கு உங்க அப்பனாடா செலவு புண்ட பண்ணுவான், தேவடியா பயலே என்று அசிங்கமாக திட்டியும், கேஸுக்கான செலவு பணத்தை கொடுடா, இல்லைனா உன்னையும், உன் குடும்பத்தையும் இங்கேயே வெட்டிகாலி செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 341, 387, 506(2) ன் கீழ் குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

ii) அ.சா.1 புகார்தாரர் சாட்சி தனது முதல் விசாரணையில் " சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மாலை 06.00 மணியளவில் நானும் எனது மனைவி மற்றும் குழந்தையுடன் சொந்த வேலையாக வெளியில் சென்றுவிட்டு ராஜா கரணை பட்டறை அருகே வந்து கொண்டிருந்தபோது அங்கு வந்த அடையாளம் தெரியாத ஒரு நபர் எங்களை வழிமறித்து ஆபாசமான வார்த்தைகளால் திட்டி செலவுக்கு பணம் கொடு என்று தகராறு செய்து மறைத்து வைத்திருந்த பிச்சுவா கத்தியை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் அந்த நபர் யார் என்று எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்பவம் தொடர்பாக வேறு எதுவும் தெரியாது. எதிரி மீது இருந்த முன் விரோதம் காரணமாக அவர்களுக்கு எதிராக புகார் வாக்கு மூலம் கொடுத்தேன். ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது " என்று சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் அ.சா.2 தனது விசாரணையில் " சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் மாலை 06.00 மணியளவில் நானும் அ.சா.1 மற்றும் குழந்தையுடன் சொந்த வேலையாக வெளியில் சென்றுவிட்டு ராஜா கரணை பட்டறை அருகே வந்து கொண்டிருந்தபோது அங்கு வந்த அடையாளம் தெரியாத ஒரு நபர் எங்களை வழிமறித்து ஆபாசமான வார்த்தைகளால் திட்டி செலவுக்கு பணம் கொடு என்று தகராறு செய்து மறைத்து வைத்திருந்த பிச்சுவா கத்தியை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் அந்த நபர் யார் என்று எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்பவம் தொடர்பாக வேறு எதுவும் தெரியாது." என்று சாட்சியம் அளித்துவிட்டு அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 இரண்டு சாட்சிகளும் அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் அ.சா.3 உதவி ஆய்வாளர் சாட்சியத்தை உறுதியூட்டு விதமாக தனிநபர் எவரும் இல்லாததால் தனிநபர் எவரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், மேலும் அ.சா.3 உதவி ஆய்வாளர் அவர்களை சாட்சியத்தை மட்டுமே எதிரி தான் குற்றவாளி என்று இந்நீதிமன்றம் முடிவு செய்ய இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, அரசு தரப்பில் எதிரி மீது இதச பிரிவு 294(b), 341, 387, 506(2) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நீரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை

குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரியை குற்றவாளி இல்லையென முடிவு செய்தும், கு/வி/மு/ச 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கில் வழக்கு சொத்தான (RP.No.206/2022) சுமார் 40 செ.மீ நீளமுள்ள பிச்சுவா கத்தி ஒன்றினை மேல்முறையீடு காலத்திற்க்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 12 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

VIJAIRAJESH K
Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.06.12 10:29:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

**இணைப்பு :**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா 1 : திரு. பிரகாஷ்

அ.சா 2 : திருமதி. புவனேஸ்வரி

அ.சா 3 : திரு. மதியழகன் (காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 16.04.2026 புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் மட்டும்

அ.சா.ஆ. 2 : 07.05.2026 புகார் மனு

அ.சா.ஆ. 3 : 07.05.2026 அச்சு முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ. 4 : 07.05.2026 பார்வை மகஜர் ஆவணம்

அ.சா.ஆ. 5 ; 07.05.2026 மாதிரி வரைபடம்
அ.சா.ஆ. 6 ; 07.05.2026 கைப்பற்றுதல் மகஜர் ஆவணம்
அ.சா.ஆ. 7 ; 07.05.2026 படிவம் 91

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:–உண்டு**

1. அ.சா.பொ. 1 – சுமார் 40 செ.மீ நீளமுள்ள பிச்சுவா கத்தி ஒன்று

**எதிரி தரப்பில் சாட்சிகள் :–** இல்லை
**எதிரி தரப்பில் சான்றாவணம் :–** இல்லை

VIJAIRAJESH K
Digitally signed by VIJAIRAJESH K
Date: 2026.06.12 10:29:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

நகல்கள்

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், திருச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு தரப்பில் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை எண்.1, ஸ்ரீரங்கம்
3. காவல் ஆய்வாளர், ஸ்ரீரங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல் நிலையம்.